**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**M.C.O.P.No.244/2018**

2026ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 09ஆம் நாள் ----என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10-வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு. பன்னீர்செல்வம் (எ.ம.சா.2) | தொழில் | : முதுநிலை உதவியாளர், நியூ இந்தியா அஸ்சூரன்ஸ் கம்பெனி |
| த/பெ.<br>க/பெ. | : திரு. வேலுச்சாமி<br>: திரு. | வயது | : 50 |
| கிராமம் | : மதுரை | இனம் | : ஆண் |
| தாலுகா | : மதுரை | நாள் | : 09.02.2026 |
| மாவட்டம் | : மதுரை | | |

**முதல் விசாரணை :-**

நான் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் முதுநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| எ.ம.சா.ஆ.3 – | TN 78 W 6480 என்ற பசாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தின் பாலிசி நகல். |
| எ.ம.சா.ஆ.4 | 28.11.2025 அன்று வாகன உரிமையாளர் தீனதயாளன் என்பவருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு அலுவலக நகல். |
| எ.ம.சா.ஆ.5 | தீனதயாளன் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பிய அஞ்சலக உறை. |
| எ.ம.சா.ஆ.6 | 28.11.2025 தேதியிட்ட வாகன ஓட்டுனர் மோகன் குமார் என்பவருக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| எ.ம.சா.ஆ.7 | மோகன்குமார் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை |

**குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். மேற்படி விபத்து தேதியில் TN 78 W 6480 வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு அமலில் இருந்தது என்று சொன்னால் சரிதான். மேற்படி காப்பீடானது 3ம் நபருக்கு காப்பீடு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது என்றால் விதிகளுக்கு உட்பட்டு காப்பீடு வழங்கப்படும். இந்த விபத்தைப் பொறுத்து மனுதாரர் 3ம் நபர் என்றால் சரிதான். காப்பீடு ஒப்பந்தம் என்பது வாகன உரிமையாளருக்கும் காப்பீட்டு நிறுவனத்திற்கும் இடையிலானது என்றால் சரிதான். மேற்படி ஒப்பந்தம் மனுதாரரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எ.ம.சா.1 தனது சாட்சியத்தில் வாகன ஓட்டுனர் வேறு ஒரு அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் பெற்றிருந்தால் அது பற்றி தெரியாது என சாட்சியமளித்துள்ளார் என்றால் வாகன ஓட்டுனருக்கு ஓட்டுனர் உரிமம் கிடையாது. மேற்படி விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர்தான் காரணம் என்பதால் எங்கள் நிறுவனம் இழப்பீடு கொடுக்கக் கடமைப்பட்டுள்ளது என்றால் பாலிசி விதிமீறல் ஏற்பட்டுள்ள காரணத்தால் எங்கள் நிறுவனம் காப்பீடு வழங்க கடமைப்பட்டதல்ல.

**மறு விசாரணை :–** இல்லை.

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledged by him/her to be correct.

K. BHARATHI Digitally signed by K. BHARATHI Date: 2026.02.09 17:22:11 +0530

Additional Sub Judge,
Palani.